செய்தி இதழாகப் பதிவு பெற்றது.

# தந்தி

University of Jaffna Sri Lanka
RECEIVED
8
Division
Library

இல: 1070 | 1970 ஜூலை 1 புதன்கிழமை | ★ ★ ★ விலை சதம் 5

## லங்கா சலுசல கடும் நடவடிக்கை எடுக்கும்

# ஜவுளியில் கொள்ளைலாபம் அடித்து தப்பமுடியாது!



சூரிய ஸ்நானம் செய்வதென்றால் பிரிட்டிஷ் பெண்களுக்கு கொள்ளை ஆசை. தனது கறுப்புக் கண்ணாடியைத் தலைக்கு மேலே உயர்த்தி விட்டுள்ள இந்த இளம் பிரிட்டிஷ் பெண், காலைக் கதிரவனின் பொன்னொளியை தன் மேனியில் தழுவவிட்டு இன்பம் காண்கிறாள்.

## திடீர் சோதனைப் பிரிவுகள் உஷார் நிலையில் உள்ளன

### ஜவுளியில் கொள்ளை லாபம் அடிக்கும் வர்த்தகர்களுக்கு எதிராக லங்கா சலுசல கடும் நடவடிக்கை எடுக்க உள்ளது.

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஜவுளி வகைகளை பொது மக்களுக்கு நியாயமான விலையில் கிடைக்கச் செய்வதே இதன் நோக்கம் ஆகும்.

லங்கா சலுசலவிடம் இருந்து ஜவுளி வகைகளை வாங்கும் வர்த்தகர்களில் பலர் அதைப் பெரும் லாபம் வைத்து விற்பது கண்டு பிடிக்கப்பட்டு உள்ளதைத் தொடர்ந்தே கொள்ளை லாபம் அடிக்கும் வர்த்தகர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுப்பதற்கு லங்கா சலுசல முடிவு செய்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை லங்கா சலுசலவின் திடீர் சோதனைப் பிரிவு ஒன்று குளியாப்பிட்டியில் உள்ள ஜவுளி வியாபார நிலையத்தை முற்றுகையிட்ட போது பெரும் லாபம் வைத்து ஜவுளிகள் விற்பனை செய்யபட்டது கண்டு பிடிக்கப்பட்டது.

மூன்று ரூபா முதல் 3–50 வரை சலுசலவினால் விலை நிர்ணயிக்கப்பட்ட ரஸ்ஸூர் துணி, யார் 5–50-க்கு விற்பனை செய்யப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டது.

கடந்த சில மாதங்களாக நாட்டில் இறக்குமதி செய்யப்படும் ஜவுளி வகைகளை வியாபாரிகள் பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்பதாகவும், பெரும்பாலும் புறக்கோட்டையில் இப்படியான மோசடிகள் நடைபெறுவதாகவும் தெரியவந்துள்ளது.

கொழும்பு வர்த்தகர்களுக்கு லங்கா சலுசலவினால் ஒதுக்கிக் கொடுக்கப்படும் ஜவுளி வகைகள் வெளியூர்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு கொள்ளை லாபம் அடிக்கப்படுவதாக சலுசலவைச் சேர்ந்த பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (5)

## மிஞட்டி



என்னங்க, இந்த இந்தியப் பத்திரிகைகளை ஏறுக்கு மாறாக விலை கூட்டி விற்கிறார்களே!

ஆமாங்க, சேட்பார் இல்லையென்றுதான்! விரைவில் மக்கள் அரசு தலையிட்டுக் கொள்ளையை நிறுத்தவே செய்யும்!

## ஜே. ஆர்., சுகததாசா, பிரேமதாசா ஆகியோர் பிரதமரைச் சந்தித்தனர்

எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்தனவும், ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான திரு. வி. ஏ. சுகததாச, திரு. ஆர். பிரேமதாச ஆகியோரும் நேற்று பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டார நாயக்காவைச் சந்தித்து தமக்குள்ள பிரச்சினைகள் பற்றி பேச்சு வார்த்தைகள் நடத்தினார்கள்.

செனட் சபை கட்டிடத்தில் உள்ள பிரதமரது அலுவலகத்தில் நடைபெற்ற இவர்களது பேச்சு வார்த்தைகளின்போது போக்குவரத்து அமைச்சரும், பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியுமான திரு. லெஸ்லி குணவர்த்தனவும் கலந்து கொண்டார்.

இவர்களது பேச்சு வார்த்தைகளின்போது பலதரப்பட்ட விஷயங்கள் பிரதமரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பிரதமர், தான் அவைகளுக்குத் தகுந்த பரிகாரம் காண்பதாக உறுதி அளித்தார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபைத் தொழிலாளர்களின் சம்பளப்பட்டியலிலிருந்து தொழிற்சங்க சந்தா கழிக்கப்படும் உரிமை சில தொழிற் சங்கங்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது என திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன சுட்டிக் காட்டினார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## கட்டானையில் இன்றுவாக்களிப்பு

கட்டான தொகுதி தேர்தல் இன்று நடைபெறுகிறது. ஐக்கிய முன்னணி அரசாங்கம் உருவாகிய பின் நடைபெறும் முதலாவது தேர்தல் இதுவாகும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் திரு. கே. ஸி. டீ. சில்வாவும், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் திரு. விஜேபால மெண்டிஸூம் இங்கு போட்டியிடுகின்றனர்.

காலை 8 மணியில் இருந்து மாலை 5 மணி வரை வாக்களிப்பு நடைபெறும். சுமார் 43,000 வாக்காளர்கள் இந்தத் தேர்தலில் வாக்களிப்பர்.

## பொலீஸ் அதிபர் மக்களின் ஒத்துழைப்பை கோருகிறார்

"காலனித்துவ ஆதிக்கத்தின் கீழ் நாம் தொடர்ந்து அல்லல் பட்டுக் கொண்டிருக்கிறோம். சுதந்திர இலங்கைக்குச் சிறந்த சேவை செய்யக்கூடிய விதமாக, மாற்றங்கள் அவசியமானதாகும். இதற்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பும் தேவை."

இன்று உதவிப் பொலீஸ் மா அதிபராகப் பதவி ஏற்கும் திரு. ஸ்ரான்லி சேனநாயக்கா மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

திரு. சேனநாயக்கா மேலும் கூறியதாவது:–

"பொலீஸ் யூனிபோம் என்பது துன்புறுத்துவதற்காகக் கொடுக்கப்படும் லைசென்ஸ் ஆகாது. பொது மக்களுக்கும் பொலீஸாருக்கும் இடையில் நல்லெண்ணத்தை ஏற்படுத்த முடியும் என்று நம்புகிறேன்"

இதற்கிடையில் நேற்று தனது பதவியில் இருந்து ஓய்வு பெற்ற முன்னாள் பொலீஸ் மா அதிபர் திரு. அலரிக் அபேகுணவர்த்தன, தனது பிரியாவிடைச் செய்தியில், பொலீஸ் திணைக்களம் நாட்டுக்கு தொடர்ந்து நல்ல சேவை செய்யும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பொலீஸாருக்கும், பொதுமக்களுக்கும் இடையில் சுமுகமான உறவை ஏற்படுத்துவது மூலமே குற்றங்களைத் தவிர்க்க முடியும் என்றும் சொன்னார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதிமன்றத்தில் கொலை முயற்சி வழக்கு:

# மனைவி பற்றிய சர்ச்சை கைகலப்பில் முடிந்தது

### எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்

வீரையா சண்முகம் என்பவரை செக்கடித் தெரு – ஜிந்துப்பிட்டி சந்தியில் வைத்து துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ய முயன்றதாகக் குற்றம் சாட்டி என். விமலஞான டி சில்வா, கே- பிரேமதாச ஆகியோர் மீது தொடரப்பட்ட வழக்கு கொழும்பு அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் திரு. ஓ- எல்- டி- கிரெட்ஸர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

முடிக்குரிய வழக்கறிஞர் திரு- குமார் அமரசேகரா வழக்கை நடத்தினர். எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் எஸ்- சரவணமுத்து, ரி. கனகசபை, எம்- மௌசுப் டீன், எஸ். பரமேஸ்வரன், எஸ்- பிபிலே ஆகியோர் ஆஜராகினர்.

முடிக்குரிய வழக்கறிஞர் ஜூரர்களுக்கு உரையாற்றுகையில் கூறியதாவது: "சம்பவம் நடைபெற்ற தினம் எதிரிகள் இருவரும் சண்முகத்தைச் சந்தித்த போது முதலாவது எதிரியைப் பார்த்து தனது மனைவி எங்கே என்று கேட்டார் சண்முகம். சண்முகத்தின் மனைவி முதலாம் எதிரியுடன் களவாக ஓடி விட்டாள்.

"இதனால் முதலாம் எதிரிக்கும் சண்முகத்துக்கும் இடையில் வாக்கு வாதம் எழுந்தது. அப்போது முதலாம் எதிரி துப்பாக்கியை கையில் எடுத்தார். உடனே சண்முகம் அந்தத் துப்பாக்கியை பறிக்க முயன்றார். அப்போது எழுந்த கைகலப்பில் துப்பாக்கி வெடித்தது. ஆனால் யாரையும் குண்டு தாக்கவில்லை" என்றார்.

இரு எதிரிகளும் குற்றத்தை ஒப்புக் கொண்டனர்- அவர்கள் பற்றி அறிக்கை சமர்ப்பிக்கும்படி நன்னடத்தை அதிகாரிக்கு உத்தர விட்டார் நீதியரசர்.

நன்னடத்தை அதிகாரியின் அறிக்கை எதிரிகளுக்கு சாதமாக அமைந்தால் முடிக்குரிய செலவாக 500 ரூபா செலுத்தும்படி முதலாம் எதிரிக்கு உத்தரவிட்டு மூன்று வருட நன்னடத்தைப் பிணையிலும், இரண்டாம் எதிரியை மூன்று வருட நன்னடத்தைப் பிணையிலும் செல்ல அனுமதிப்பதாக நீதியரசர் கூறினார். (ம)

### 44 பயிற்சி ஆசிரியர்கள் மீண்டும் சேர்க்கப்படுவர்

முன்னாள் கல்வி அமைச்சருக்கு "கூக் காட்டினார்கள்" என்று காரணம் காட்டி வெளியேற்றப்பட்ட ஹிங்குராங்கொட ஆசிரியப் பயிற்சிக்கல்லூரியைச் சேர்ந்த 44 பயிற்சி ஆசிரியர்களைத் திரும்பவும் சேர்த்துக் கொள்ளும்படி கல்வி அமைச்சர் அல்ஹாஜ் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் உத்தர விட்டுள்ளார்.

கடந்த 1968-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முன்னாள் கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ- ஈரிய கொல்லே அந்தப் பகுதிக்கு விஜயம் செய்தபோது அவருக்கு அவமரியாதை புரியும் விதத்தில் கூக்குரலிட்டதாகக் குற்றம் சாட்டி இவர்கள் அதேமாதம் 18-ம் திகதி வெளியேற்றப்பட்டார்கள். (ம)

### மதுவில் கொண்ட மோகம் உயிரே போகப் பார்த்தது

மதுவில் மோகம் கொண்ட கணவர் ஒருவர், தற்கொலை முயற்சியில் தோல்வி கண்டு பேச முடியாத நிலையில் மன்னார் வைத்திய மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்- மனைவியின் புத்திமதியை வெறுத்து அவரின் மேல் கடுங் கோபம் கொண்டே இவர் துவக்கினால் தன்னைச் சுட்டுத் தற்கொலை செய்து கொள்ள முயற்சித்ததாக கூறப்படுகின்றது-

அந்தப் பெண் பொலீஸாரின் விசாரணையின்போது மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்தார். அவர் கணவருடன் உயிலங்குளத்தில் உள்ள கள்ளிக்கட்டைக்காடு என்னும் கிராமத்தில் வசித்து வருகிறார்- மதுப் பிரியரான கணவர் தினமும் குடிப்பாராம்- இதனால் அடிக்கடி வாக்கு வாதமும் மனக்கசப்பும் ஏற்படுவதுண்டு-

சம்பவ தினமும் குடிவெறியில் வந்த கணவருக்கு மனைவி புத்திமதி கூறியுள்ளார்- இதைத் தொடர்ந்து இருவருக்குமிடையே சச்சரவு ஏற்பட்டதாம்- அடக்க முடியாத கோபம் அடைந்த கணவர், மனைவிக்குப் புத்தி புகட்ட எண்ணி துவக்குடன் வீட்டின் அறையினுள் சென்றுள்ளார்-

பதட்டமடைந்த மனைவி தற்கொலை முயற்சியைத் தடுத்து நிறுத்த கணவருடன் போராடியுள்ளார்- பலாத்காரமாக தனது மனைவியை அறைக்கு வெளியே தள்ளிய கணவர், கதவைப் பூட்டிய பின் துவக்கால் தன்னைச் சுட்டுக் கொண்டாராம் கழுத்திலும் வாயிலும் தாடை எலும்பிலும் பலத்த காயமடைந்து மயக்கம் போட்டு விழுந்துள்ளார்- கவலையடைந்த மனைவி அயலாரின் உதவியுடன் கணவனை உடனடியாக மன்னார் வைத்திய மனையில் சேர்ப்பித்தார்-

இவர் பேச முடியாத நிலையில் இருப்பதால், பொலீஸார் இவரின் வாக்குமூலத்தைப் பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதாக அறியப்படுகிறது- இதற்கிடையில் காயமடைந்த இந்நபரை சிகிச்சைக்காக கொழும்பு பெரிய ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது- (ம-185)

### சிகரெட்டுக்கு வரி உயர்வு

ராவல்பிண்டி, ஜூன். 30

பாகிஸ்தானின் புதிய வரவு செலவுத் திட்டம் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டது. சிகரெட்டுக்கு வரி உயர்த்தப்பட்டுள்ளது. டெலிவிஷன் போன்ற ஆடம்பரப் பொருட்களின் இறக்குமதித் தீர்வை 20 சதவிகிதம் உயர்த்தப்பட்டுள்ளது. (ம)

### பாதைப் பிரச்சினையால் மாமன், மருமகன் சண்டை

காத்தான்குடி 6-ம் குறிச்சியில் உள்ள பிரபல வர்த்தகர் ஒருவரின் மருமகனுக்கும், மாமனாருக்கும் இடையில் நீண்டகாலமாக பாதைப் பிரச்சினை- மருமகன் தனக்குச் சீதனமாகக் கொடுத்த வீடுவளவை விற்பனை செய்யப் போவதாக அறிவித்ததைத் தொடர்ந்து இப் பிரச்சினை மேலும் வலுவடைந்துள்ளது-

மருமகன் வீட்டிற்கும், மாமனார் வீட்டிற்கும் போகும் ஒழுங்கை ஒன்றேதான்- மாமனார் வீட்டிற்கு அடிக்கடி குப்பம் கேட்டு ஒரு சிலர் வருவது போவது மருமகனுக்கும் மகளுக்கும் பிடிக்கவில்லை- இதனால் மருமகன் மாமனாரைப் பார்த்து "இந்த வழியால் நீங்கள் போக்குவரத்துச் செய்யக் கூடாது உங்கள் வீட்டுக்கு வேறொரு வழி எடுத்துப் போக்குவரத்துப் பண்ணவும்- இதை மீறினால் இந்த வீட்டை விற்று விடுவேன்" என்று மிரட்டினார்-

இதை மீறி மாமனார் அவ்வழியே போக்குவரத்து செய்தபடியால் மருமகனும் மகளும் வீட்டை விட்டு வெளியேறியுள்ளனர்- தற்போது மருமகனின் வீட்டில் குடி புகுந்துள்ளார்கள்-

மருமகன் வீடுவளவை உண்மையில் விற்று விடுவாரென்று பயந்த மாமனார் இது பற்றிக் காத்தான்குடி பெரிய பள்ளிவாசல் தர்மகர்த்தாக்களுக்குப் புகார் செய்துள்ளாராம்- (ம-135)

### நினைத்ததையெல்லாம் கூறுகிறாராம் அந்த பெண்!

"இந்தப் பெண் தன் மனதில் தோன்றுவதை எல்லாம் கூறத் தயங்க மாட்டாள் போலும்- எதிர் மனுதார் தன்னைக் கடத்திச் சென்று கற்பழித்ததாக முன்னர் மத்துகம பொலீஸில் புகார் செய்துள்ளாள்- விசாரணையின்படி கற்பழிக்கப்பட்டதாகக் கூறப்படும் தினத்தன்று மனுதார் ஐந்து மாதக் கர்ப்பிணி எனத் தெரிய வந்துள்ளது- இதிலிருந்து இவளைப் பற்றி தெரிந்து கொள்ளலாம்-"

மேற்கண்டவாறு எதிர் மனுதாரின் வழக்கறிஞர் மத்துகம நீதவான் திரு- நிஸங்கா வீரரத்ன முன்னிலையில் கூறினார்-

இவ்வழக்கில் கட்டுகஹாகேனயைச் சேர்ந்த எச்- ஏ- திலகவதி டி அல்விஸ், தனக்கும் தன் பிள்ளைக்கும் தாபரிப்புப் பணம் கோரி, யட்டதோல தோட்ட லிகிதர் ரஞ்சித் குணவர்த்தன மீது வழக்குத் தாக்கல் செய்துள்ளார்-

மனுதாரரின் வழக்கறிஞர்– "இன்னுமொரு புகார் கூற விரும்புகிறேன் ஐயா- எதிர் மனுதார் சில காடையர்களுடன் சென்று மனுதாரைக் கோர்ட்டுக்கு வர வேண்டாம் என்று பயமுறுத்தியுள்ளார்-"

நீதவான்– "அப்படியானால் என்ன செய்யவேண்டும்?"

மனுதாரின் வழக்கறிஞர்– "மனுதாரைப் பயமுறுத்த வேண்டாமென்று எதிர் மனுதாருக்கு உத்தரவிட வேண்டும் ஐயா!"

நீதவான் (எதிர் மனுதாரைப் பார்த்து)– "நீர் அல்லது உமது சிநேகிதர் மனுதாருக்கு இடைஞ்சல் விளைவித்தீர்களா?"

எதிர் மனுதார்– "இல்லை ஐயா!"

மேல் விசாரணை செப்டம்பர் 5-ந் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது- (ம-15)

### கம்பனி பங்குதாரர்கள் மூவருக்கு அபராதம்

முன்னாள் ஊழியர் ஒருவருக்கு, தொழில் நீதிமன்ற உத்தரவின் பேரில் நஷ்டஈடு வழங்கப்படவில்லை. அதனால் பத்மினி பிளாஸ்டிக் இண்டஸ்ரீஸ் பங்குதாரர்கள் மூவருக்கு தலா 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொழும்பு பிரதம நீதவான் திரு- ஈ. எவ்- டீ. சில்வா முன்னிலையில் இவ்வழக்கு விசாரிக்கப்பட்டது.

விஜயா ரணசிங்கா என்னும் ஊழியருக்கு ரூ. 6,000 நஷ்ட ஈடு வழங்கும்படி தொழிற் கோடு தீர்ப்பு வழங்கி இருந்தது. அத் தீர்ப்பின்படி நடக்கவில்லை என்பதற்காக திரு- எல்- சி- பீரிஸ், திரு- ரி. டீ- குணசேகரா, திரு. ஏ- அலோசியஸ் ஆகிய மூவருக்கும் அபராதம் விதிக்கப்பட்டது.

தொழிற் கோடு தீர்ப்பை ஊர்ஜிதம் செய்ய தனக்கு அதிகாரம் உண்டு என்றும், ஆனால் ஒவ்வொரு பங்குதாரரும் எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று தொழிற் கோடு கூறாதபடியால் தான் அது பற்றி தீர்ப்பளிக்க முடியாமல் இருப்பதாகவும் நீதவான் கூறினார்.

தொழில் திணைக்களத்தைச் சேர்ந்த திரு. கே- தர்மரத்தினம் வழக்கை நடாத்தினார். (ம-15)


### பொருத்தமான சிகிச்சை

அவள் ஒரு பொலீஸ்காரனின் இல்லக்கிழத்தி- அவள் வீட்டில் தனித்திருந்தாள்- அந்த நேரத்தில் காதல் பரவசத்தால் உந்தப்பட்ட ஒரு பொலீஸ்காரன் அவளுடைய வீட்டிற்குள் உட்புகப் பார்த்தாராம்- இந்தக் கதை எத்துணை தூரம் நாட்டு மக்களின் மன வெறுப்பை உண்டாக்கும் என்பதை நாம் சொல்லத் தேவையில்லை- இத்துணைக்கும் அவளுடைய பொலீஸ்காரனாகிய கணவன் கால் வீக்கத்திற்கு வைத்தியம் செய்துகொண்டு ஆஸ்பத்திரியிற் படுத்திருந்தாராம்- அடப்பாவி! இப்படியாகவா காதல்வேட்டையாடுவது! இது காதல் வேட்டையல்லத் தலைவீக்கவேட்டையென்றே சொல்லுதல் வேண்டும்- இத்தகைய தலைவீக்கத்திற்குச் சட்டை கழற்றும் மருந்தில் ஒரு டோஸ் தான் வெகு பொருத்தமாயிருக்கும்!

தந்தி



**தந்தி**

**சிறு விளம்பரங்கள்**

### மருந்து

மதன சஞ்சீவி லேகியம். (ஆண்களுக்கு மட்டும்) பாலிய சேஷ்டையினலோ, அல்லது அதிக சம்போகத்தினலோ, வீரியம், ஆண்மை குறைந்தவர்களுக்கும் (SEXUAL DEBILITY) சக்தியை இழந்தவர்களுக்கும் இழந்துபோன சக்தியைமீட்டு, புதிய சக்தியையும் திரேக வளர்ச்சிக்கும், குடும்ப வாழ்க்கைக்கும் சிறந்த லேகியம், ஒரே புட்டியில் குணம் காணலாம். மதன சஞ்சீவி, ஒரு ரூத்தல் ரூ: 23/-. ½ ரூத்தல் ரூ. 12/- வி. பி. பி. ஆடர் கவனிக்கப்படும். முருகானந்தா வைத்திய சாலை, 104, செட்டியார் தெரு, கொழும்பு - 11.

R 66861


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்துடன் வந்து மணம் புரிவேன் எனக் கூறியவர்

# கர்ப்பிணியாக்கி விட்டு கைவிட்டுச் சென்றார்!

## ஜீவனாம்சம் கோரி வழக்கு தாக்கல் செய்தாள் நங்கை

"நான் கர்ப்பம் தரித்துள்ள விபரத்தை ஜயரத்தினவிடம் கூறிய போது அவர் என்னைப் பார்த்து, "கலங்காதே கண்ணே. விரைவில் நான் உன்னை மணம் முடிப்பேன்" என்றார். ஆனால் அதன் பின் அவர் என்னைச் சந்திப்பதைக் கூட விட்டு விட்டார்".

நீர்கொழும்பு நீதவான் திரு. பி. பீ. ரம்புக்வெல முன்னிலையில் சாட்சியம் அளித்த திவுலப்பிட்டியைச் சேர்ந்த எல். பி. சிறியாவதி என்னும் 17 வயதுப் பருவக் குமரி மேற்கண்டவாறு கூறினார்.

அதே ஊரைச் சேர்ந்த சந்திரசேகரா ஜயரத்தின என்னும் இளைஞனிடம் ஜீவனாம்சம் கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார் சிறியாவதி.

சிறியாவதி தனது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது: "நான் கர்ப்பிணியான விஷயம் தெரிந்ததும்தான் தனது வீட்டுக்குச் சென்று பணத்துடன் வருவதாகவும், திருமணம் செய்து சுகமாக வாழலாம் எனவும் அவர் கூறிச் சென்றார். ஆனால் அவர் வரவேயில்லை.

"குழந்தை பிறந்த பின்னரும் அவர் வரவில்லை. குழந்தையைப் பராமரிக்க எனக்கு வழி இல்லை. மாதம் 50 ரூபா ஜீவனாம்சம் பெற்றுத் தாருங்கள்" என்றார்.

மேல் விசாரணை ஜூலை 30-ம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டது. (ம)

## "ஆறு வருடக் காதல் உறவு கூட்டிச் சென்றார் என்னை"

"காலஞ்சென்றவரும் நானும் கடந்த ஆறு வருடங்களாக காதலித்து வந்தோம். 1969-ம் ஆண்டு ஜூன் மாதம் 12-ம் திகதி நான் அவருடன் ஓடிப் போய் இரத்தினபுரியிலுள்ள அவருடைய மாமி வீட்டில் தங்கி இருந்தேன். பின்னர் அங்கிருந்து கேகாலையில் உள்ள அவருடைய தகப்பனாரின் வீட்டுக்குச் சென்றோம். அங்கே நான் வாழ்ந்து வந்த காலத்தில் எனது சகோதரனும், மாமாவும் அங்கே வந்து என்னை வீட்டுக்கு கூட்டி வந்தனர்."

பியதாச என அழைக்கப்படும் ஆறுமுகம் பழனியப்பா என்பவரது மரணம் சம்பந்தமாக ரம்புக்கனை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எம். எம். குணதிலகா முன்னிலையில் நடைபெற்ற விசாரணையில் சாட்சியம் அளித்த எஸ். ஏ. பண்டார மெனிக்கா என்னும் இளம் பெண் மேற்கண்டவாறு கூறினார்.

"அவர் தன்னை ஒரு சிங்களவர் என்று கூறியே என்னைக் கூட்டிச் சென்றார். ஆனால் அவர் ஒரு தமிழர் என்பது பின்னரே எனக்குத் தெரிய வந்தது" என்றும் பண்டார மெனிக்கா கூறினார்.

ரங்கசாமி கதிரவேலு, பி. ஜே. ஆறுமுகம் ஆகியோரும் சாட்சியம் அளித்தனர். தற்கொலையெனத் தீர்ப்பளித்தார். திடீர் மரண விசாரணை அதிகாரி. (ம)

## கொலை முயற்சி வழக்கில் எதிரியான தந்தை விடுதலை

மட்டக்களப்பு, ஜூன் 30

"எதிரி தனது மகன் கில்பேட் ஸ்டாரக்கை வீட்டிற்குள் வைத்தபடியே வீட்டிற்கு தீ மூட்டியதன் மூலம், அந்தச் சந்தர்ப்பத்தில கில்பட் ஸ்டாரக் இறந்திருந்தால் எதிரி கொலை செய்த குற்றத்திற்கு உள்ளாவார். இவ் வழக்கு எதிரியின் குழந்தைகளினதும், மைத்துனரதும் சாட்சியங்களிலேயே தங்கியுள்ளது. சாட்சிக் கூண்டில் சாட்சிகள் கூறியதில் இருந்து அவர்கள் ஏற்கனவே கொடுத்த வாக்கு மூலங்களில் இருந்து மாறுபட்டதையே தெரிவித்துள்ளார்கள். எனவே நான் எதிரியை விடுதலை செய்கிறேன்."

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட தற்காலிக நீதிபதி திரு. கே. நவரெட்ணராஜா தமது முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட கொலை எத்தனிப்பு வழக்கில் தீர்ப்பளிக்கையில் கூறினார்.

பிரஸ்தாப கொலை எத்தனிப்பு வழக்கில் மட்டக்களப்பு இருதயபுர கொலனியைச் சேர்ந்த ஜோசப் ஸ்டாரக் என்பவர் அவரது மகனாகிய 12 வயது சிறுவன் கில்பேட் ஸ்டாரக்கை கொலை செய்ய முயற்சித்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

இவ் வழக்கில் சாட்சியமளித்த எதிரியின் மகன் கில்பட் ஸ்டாரக் தெரிவித்ததாவது—

"நான் எனது தகப்பனருக்கு தச்ச வேலையில் உதவி புரிந்து வந்தேன். எதிரி எனது தகப்பனர். எனது வீடு தீ மூட்டப்பட்ட நாள் எனக்கு நல்ல ஞாபகம். பிரஸ்தாப தினத்தன்று நான் கோவில் வளவில் விளையாடிக் கொண்டிருந்தேன். அன்று எனது தகப்பனர் இரண்டு போத்தல் லாம்பெண்ணை வாங்கி வரும்படி கேட்டார். வீடு தீயிடப்பட முன்பு நான் லாம்பெண்ணை வாங்கிக் கொடுத்தேன்.

கோர்ட் — பொலீஸாருக்கு கொடுத்த வாக்கு மூலத்தில் வீடு எரியும் பொழுது நீ வீட்டிற்குள் இருந்ததாகக் கூறினயா?

சாட்சி — இல்லை.

பின்பு சாட்சியம் அளித்த எதிரியின் மைத்துனர் மக்ஸின் ஜேயின்சன் கூறியதாவது—

"எதிரி எனது மைத்துனர் சம்பவ தினம் எனக்கு நல்ல ஞாபகம். பிரஸ்தாப தினத்தன்று நான் பொலீஸ் நிலையத்திற்கு சென்று சில தகவல்கள் கொடுத்தேன். வீடு தீ மூட்டப்பட்டதாகக் கூறினேனே ஒழிய யார் வீட்டிற்கு தீ மூட்டியதென நான் கூறவில்லை. வீடு எரியும் பொழுது வீட்டிற்குள் யார் இருந்தார்களென எனக்குத் தெரியாது."

திரு. தியாகராஜா எதிரி தரப்பில் ஆஜரானர். திரு. ஜே. ஜே. டேவிட்டுடன் மட்டக்களப்பு பொலீஸாரின் குற்றப் பகுதி இன்ஸ்பெக்டர் திரு. டபிள்யூ. பீ. ஆர். சேனநாயகா வழக்கை நடத்தினர். (ம-42)

## இசைவழியே விஞ்ஞானம் போதிக்கும் ஆசிரியர்

ரங்கூன், ஜூன் 30

ரங்கூனின் துணை நகரான தென் ஒக்கல்பாவிலுள்ள ஓர் ஆசிரியர் விஞ்ஞானத்தைக் கற்பிப்பதற்கு இசையைப் பயன்படுத்துகிறார். பல்வேறு விஞ்ஞான விவரங்களைப் பாட்டாக்கி, மாணவர் எளிதில் அவற்றை மனப்பாடம் செய்யும் வகையில், இசையோடு கலந்து பாடச் செய்கிறது.

ஒலி நாடாவில் பதியப்பட்டுள்ள இந்த அறிவியல் இசையில் பர்மியக் கொட்டுக்கள், குழல்கள் மற்றும் பிற இசைக் கருவிகள் மீட்டப்படுகின்றன.

ஊதான்சோ என்னும் விஞ்ஞான ஆசிரியர் கண்டு பிடித்துள்ள இந்த முறை கலைப்பாடங்களிலும் கைக் கொள்ளப்படுமாம். (ம)

## நால்வருக்கு மரணதண்டனை

தெஹ்ரான், ஜூன் 30

போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டதற்காக நால்வருக்கு தெஹ்ரான் நாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்டது. இவர்களின் தண்டனையை ராணுவத் துப்பாக்கிப் படை ஒன்று நிறைவேற்றி வைத்தது.

போதைப் பொருள் கடத்தலுக்காக இங்கு இதுவரை 39 பேர் மரணதண்டனை பெற்றனர். (ம)

## மே. வங்காள கவர்னரை விலக்க வேண்டுகோள்

புதுடில்லி, ஜூன். 30

மேற்கு வங்காள கவர்னரை விலக்க வேண்டும் என எதிர்க் காங்கிரஸ் கட்சியினர் கோரினர்.

மாவோ சார்பு புரட்சியாளர்களுக்கு மேற்கு வங்காள கவர்னர் திரு. சாந்தி சாரூப் தவான் உதவி அளித்ததாக எதிர்க் கட்சி குற்றஞ்சாட்டியது. (ல)

## ஒரே வீட்டில் வாழ்ந்த மூவர் பாம்புக் கடிக்கு பலி

ஒரே வீட்டில் வாழ்ந்து வந்த புதுமணத் தம்பதிகளும், ஒரு இளம் பெண்ணும் பாம்பு தீண்டியதால் மரணமுற்ற பரிதாப சம்பவம் அறிவிக்கப்படுகிறது.

பொலன்னறுவை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. டி. பி. இரத்நாயக்கா முன்னிலையில், ஈ. கிரிபுஞ்சா (25), கே. கரோலின (16), ஈ. பொடிநோனா, ஆகியோரின் மரணம் சம்பந்தமாக நடைபெற்ற விசாரணையின் போது மேற்கண்டவாறு தகவல் தெரிவிக்கப்பட்டது.

ஈ. டிங்கிரி என்னும் மூதாட்டி தனது சாட்சியத்தில் கூறியதாவது: "காலஞ்சென்ற ஆண் எனது மகன். பெண்களில் ஒருத்தி அவனுடைய மனைவி. மற்றவள் சகோதரி.

"மகனும் மனைவியும் ஒரு அறையில் படுத்திருந்தனர். மற்ற அறையில் நானும் மகளும் படுத்திருந்தோம். அதிகாலை 2 மணியளவில் எனது மருமகள் அலறும் சத்தம் கேட்டது. ஓடிச் சென்று பார்த்தோம். ஏதோ கடித்து விட்டதாக அவள் கூறினாள். தன்னையும் ஏதோ கடித்து விட்டதாக மகன் கூறினன். ஒரு பாம்பு வெளியே ஓடுவதைக் கண்டேன்.

"இருவரையும் உடனடியாக விஷக் கடி வைத்தியரிடம் கொண்டு சென்று சிகிச்சை அளித்துக் கூட்டி வந்தேன்.

"வீடு திரும்பிய போது அங்கே எனது மகள் அழுது கொண்டிருந்தாள். தன்னையும் ஏதோ கடித்து விட்டதாக அவள் கூறினாள். அவளையும் வைத்தியரிடம் கூட்டிச் சென்றேன். ஆனால் மூவரும் பின்னர் இறந்து விட்டனர்." என்றார்.

விஷக் கடியினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார் திடீர் மரண விசாரணை அதிகாரி. (ம)

## பாதசாரியை மோதி விட்டு ஓடி மறைந்த டாக்ஸி

"காலஞ்சென்றவரை டாக்ஸி மோதிய போது அவர் தூக்கி எறியப்பட்டார். டாக்ஸி அவர் மேல் ஓடி, அவரையும் இழுத்துக் கொண்டு நூறு அடி தூரம் வரை சென்று பின்னர் ஓடி மறைந்தது"

பாகொடையைச் சேர்ந்த டபிள்யூ. ஏ. பியதாச என்பவரின் மரணம் சம்பந்தமான விசாரணை கொழும்பு திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எகர்டன் வீரக்கோன் முன்னிலையில் நடைபெற்ற போது சாட்சியம் அளித்த கே. டபிள்யூ. லயனல் என்பவர் மேற்கண்டவாறு கூறினர்.

விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. டாக்ஸியையும், டிரைவரையும் பிடிக்க பொது மக்களின் உதவி கோரப்பட்டுள்ளது. (ம)

## 5 மந்திரிகள் விலக்கப்பட்டனர்

ஏதென்ஸ், ஜூன். 30

கிரேக்க பிரதமர் திரு. ஜோர்ஜ் பப்பட பவுல்ஸ் தனது அரசாங்கத்தின் 5 மந்திரிகளை விலக்கினர்.

## வீழ்ந்ததால் 17 பேர் பலி

### வீழ்ந்து 17 பேர் மரணமுற்றனர்

ஜெய்ப்பூர், ஜூன் 30

திருமண வரவேற்பு நடைபெற்றுக் கொண்டிருந்த ஒரு வீட்டின் மாடி இடிந்து விழுந்ததில் 17 பேர் கொல்லப்பட்டார்கள். சுமார் 100 பேருக்கு மேல் காயமடைந்தார்கள்.

இந்தப் பரிதாபச் சம்பவம், ராஜஸ்தானில் பாலி ஜில்லாவில் உள்ள பூசி கிராமத்தில் சனிக்கிழமையன்று நடைபெற்றுள்ளது.

காயமடைந்தவர்களில் 24 பேர் பாலி ஆஸ்பத்திரியிலும் ஜோத்பூர் ஆஸ்பத்திரியிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் இருவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகக் கூறப்படுகிறது.

சொற்ப காயமடைந்த மற்றவர்களுக்கு முதலுதவி அளிக்கப்பட்டது. இவ்விபத்தில் 22 பேர் கொல்லப்பட்டதாகவும் 150 பேருக்கு மேல் காயமடைந்ததாவும் அதிகாரபூர்வமற்ற தகவல்கள் கூறின. (ம)

## மாஸ்கோவில் நாஸர்

மாஸ்கோ, ஜூன். 30

எகிப்திய ஜனதிபதி நாஸர், மாஸ்கோ வந்து சேர்ந்தார்.

மத்தியகிழக்கு விவகாரம் பற்றி சோவியத் தலைவர்களுடன் இவர் பேச்சுவார்த்தை நடத்துவார். (ல)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதுக்கல் பேர்வழிகளை மக்கள் அரசு ஒழிக்கும்

நாட்டில் உள்ள பதுக்கல் பேர்வழிகளை முற்றாகவே ஒழிக்க மக்கள் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. பதுக்கல்காரர்களின் பண்டங்களை அரசாங்கம் அப்படியே பறிமுதல் செய்யத் திட்டமிட்டுள்ளது.

மொத்த வியாபாரிகள் பலர் அத்தியாவசிய உணவுப் பொருட்களை பதுக்கி வைத்து, செயற்கையான தட்டுப்பாட்டை உண்டாக்குகிறார்கள். பின்னர் அவற்றை கள்ளச் சந்தையில் அதிக விலைக்கு விற்கிறார்கள். உணவுப் பொருட்களின் விலைவாசிகள் உயர இது முக்கிய காரணமாக இருக்கிறது.

இதனை கருத்தில் கொண்டே அரசாங்கம் புதிய நடவடிக்கையை மேற்கொள்ள முடிவு செய்துள்ளது. மொத்த வியாபாரிகள், உணவுப் பொருட்களை பொது மக்களுக்குக் கிடைக்கக் கூடியதாக தங்கள் பண்டங்களை தக்கபடி விநியோகிக்கிறார்களா? இல்லையேல் பதுக்கி வைத்து தட்டுப்பாட்டை ஏற்படுத்துகிறார்களா? இவற்றை அறிவதற்காக உணவுத் திணைக்களத்தில் உள்ள உத்தியோகத்தர் சிலர் விரைவில் விசேஷ அதிகாரிகளாக நியமிக்கப்படுவர். நாடு பூராவும் உள்ள மொத்த வியாபாரிகளை அடிக்கடி சோதனை செய்ய இவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படும்.

உணவு, மற்றும் அத்தியாவசிய பொருட்களை பதுக்கி விட்டு, அவற்றைப் பொதுமக்களுக்கோ அல்லது சில்லறை வியாபாரிகளுக்கோ விற்க மறுக்கும் மொத்த வியாபாரிகள் பற்றி உணவுத் திணைக்களத்துக்கு அறிவிக்கலாம். உடனே இதற்கென நியமிக்கப்படவுள்ள விசேஷ அதிகாரிகள் சம்பந்தப்பட்ட வியாபார ஸ்தலத்துக்குச் சென்று சோதனை நடத்துவார்கள்.

சம்பந்தப்பட்ட வியாபாரி உணவுப் பொருட்களையோ அல்லது மற்றும் அத்தியாவசியப் பொருட்களையோ பதுக்கி வைத்திருப்பது உண்மையெனக் கண்டு பிடிக்கப்பட்டால் உடனடியாக அவர்வசமுள்ள பொருட்கள் பறிமுதல் செய்யப்படும்.

பொதுமக்கள் அறிவிக்காமல், விசேஷ அதிகாரிகள் தாங்களாகவும் திடீர் திடீரென மொத்த வியாபார ஸ்தலங்களைச் சோதனையிடுவர். நாட்டில் உள்ள ஒவ்வொரு மொத்த வியாபார ஸ்தலத்தையும், விசேஷ அதிகாரிகள் மாதத்தில் நான்கு அல்லது ஐந்து தடவைகள் ஒழுங்காகச் சோதனையிடுவர்.

இந்தத் திட்டம் அமுலானதும், மேலும் பல பொருட்களை கட்டுப்பாட்டு விலைத் திட்டத்தின் கீழ் கொண்டு வருவது பற்றி அரசாங்கம் இப்போது பரிசீலனை செய்து வருகிறது. (ம)

## பிரஜா உரிமை ரத்து பற்றி குறிப்பிட்டுள்ளது தவறு

### செனட்டர் நடேசன் உரை

"இலங்கை — இந்திய ஒப்பந்தத்தின் 24-வது பகுதியில், நாட்டுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடும் இந்தியர்களின் பிரஜா உரிமை உடனடியாக ரத்துச் செய்யப்படும் என்று கூறப்பட்டுள்ளது. சிம்மாசனப் பிரசங்கத்தில் இந்திய பிரஜா உரிமை பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கும் இந்த அம்சம் பிழையானதாகும்."

மூதவையில் சிம்மாசன' பிரசங்கத்திற்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீது உரையாற்றிய செனட்டர் எஸ். நடேசன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது—

"இதன்படி ஏற்கனவே பிரஜா உரிமை பெற்றவர்களும், இனிமேல் பிரஜா உரிமை பெறப் போகிறவர்களும் தங்களது பிரஜா உரிமைகளை இழக்க வேண்டி இருக்கும்.

"இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்படி மூன்று லட்சம் பேர்கள் பிரஜா உரிமை பெறக்கூடியவர்களாக இந்நாட்டில் இருக்கிறார்கள். அரசாங்கத்துக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டார்கள் என்று அரசாங்கம் இவர்களை ஒரு சந்தர்ப்பத்தில் கருதும்பட்சத்தில் இவர்கள் நிலை என்னாகும்? இந்த முறையில் நமது இன்றைய அரசாங்கத்தில் நியமன அங்கத்தவராக இருக்கும் ஜனப் அஸீசும் தமது பிரஜா உரிமையை பறி கொடுக்க நேரிடலாம்.

"பிரஜா உரிமையை ரத்துச் செய்யும் அதிகாரம் பிரதமருக்கு இருக்கக்கூடாது. இதனால் சேர் ஜோன் கொத்தலாவலை காலத்தில் நடைபெற்ற நாடு கடத்தல் சம்பவங்கள் மீண்டும் தலைதூக்கும்.

"இந்நாட்டில் இந்தியப் பிரஜைகளாக இருக்கும் 3 லட்சம் மக்களும் என்றும் சந்தேகப் பிரஜைகளாகவே வாழ வேண்டும் என நினைப்பதுதான் சோஷலிஸமா?

"இப்படிப்பட்ட ஒரு பாரதூரமான சட்டத்துக்கு சிம்மாசனப் பிரசங்கத்திலும் ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இடமளிப்பதா சோஷலிஸம்?

"அரசியல் நிர்ணய சபை, பிரஜா உரிமை பற்றி நன்கு ஆராய வேண்டும். நல்லதொரு முடிவுக்கு வர வேண்டும்.

"அரசியல் நிறுவன சபை இந்த நாட்டின் வரலாற்றில் மிக முக்கியமான சபையாகும். அடிப்படைப் பிரச்சினைகளான நாடற்ற 10 லட்சம் மக்களின் பிரச்சினை, மொழிப் பிரச்சினை, இனப் பிரச்சினை, சட்டப் பிரச்சினைகளை ஆழ்ந்து ஆராய்ந்து அதற்கான பரிகாரங்களை தேட வேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன்.

அரசியல் நிர்ணய சபையில் ஒரு புத்தர் சிலையை வைத்து அவரது போதனைகளை நிதர்சனமாக்க உழைக்க வேண்டும்" இவ்வாறு செனட்டர் நடேசன் தனது பேச்சில் குறிப்பிட்டார். (ம)

## சமூக சேவைகள் இனி சிங்களத்தில் மட்டுமே

சமூக சேவைகள் அமைச்சின் கீழ் இயங்கும் சகல காரியாலயங்களிலும் சிங்களத்திலேயே கருமம் நடைபெறும்.

சமூக சேவைகள் அமைச்சர் திரு. ரி. பி. தென்னக்கோன் நேற்று விடுத்த விசேட உத்தரவின் பேரிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நூற்றுக்கு நூறுவீதம் சிங்களத்திலேயே கருமங்கள் நடைபெற வேண்டுமென்றும், இதற்கு ஒத்துப் போக முடியாதவர்கள் அமைச்சிலிருந்து வெளியேறிவிட வேண்டுமென்றும், சமூக சேவைகள் அமைச்சர் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ம)

## இஸ்ரவேலருடன் 20 நிமிடநேரம் கடுஞ் சண்டை

அம்மான், ஜூன்- 30

ஜோர்தானின் வட பகுதியில் நேற்று நடைபெற்ற 20 நிமிட நேர சண்டையொன்றில் நான்கு இஸ்ரவேலர்கள் கொல்லப்பட்டனர்.

ஜோர்தான் தரப்பில் எவரும் கொல்லப்படவில்லை என்றும் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## திருமலையில் பெருமளவு மாவு நாசமடைந்தது

சுமார் முப்பது லட்சம் ரூபா பெறுமதியான 32,000 மூடை இத்தாலிய கோதுமை மா நாசம் அடைந்து, மனித பாவனைக்குத் தகுதியற்ற நிலையில் திருகோணமலையில் தேங்கிக் கிடக்கிறது.

மனித பாவிப்புக்கு உதவாத இந்த மா இங்குள்ள உணவுக் குதங்களில் தேங்கிக் கிடப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

துறைமுகக் கூட்டுத்தாபன புதிய டைரக்டர் திரு. ரி. பி. திஸாநாயக்கா இங்கு விஜயம் செய்த போது இந்த நிலை கண்டு அதிர்ச்சியுற்றார்.

இங்குள்ள உணவுக் காரியாலய அதிகாரிகளுடன் உணவுப் பொருட்களை அப்புறப்படுத்தும் விஷயமாக அவர் கலந்துரையாடினார்.

பழுதடைந்துள்ள சுமார் 32 ஆயிரம் இத்தாலிய மா மூடைகளை மிருக உணவு தயாரிக்கும் எண்ணெய், கொழுப்புக் கூட்டுத்தாபனத்துக்கு அனுப்பி விடுமாறு அவர் ஆலோசனை கூறினார். (ம)

## எதிர்ப்பு

லண்டன், ஜூன்- 30

பிரிட்டனில் உள்ள மாபெரும் தொழிற் சங்கம் ஒன்று பொதுச் சந்தையில் பிரிட்டன் இடம் பெறுவதை எதிர்க்கின்றது.

## சிஹானுக் மீது சதி குற்றம் சாட்டி வழக்கு

நாம்பெங், ஜூன் 30

இளவரசர் சிஹானுக்குக்கு எதிராக கம்போடிய அரசாங்கம் சதிக் குற்றம் சாட்டி வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

சிஹானுக் இல்லாமலேயே இந்த வழக்கு விசாரணை நடைபெறும் என்று கம்போடிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

30 வருடமாக கம்போடிய அரசின் தலைவராகவும், மன்னராகவும் ஆட்சி செலுத்திய இளவரசர் சிஹானுக் புரட்சி சதி ஒன்றின்மூலமாக கடந்த மார்ச் மாதம் பதவியிலிருந்து இறக்கப்பட்டார்.

ஜூலை 3-ம் திகதி இளவரசர் சிஹானுக்குக்கு எதிரான வழக்கு விசாரணை ஆரம்பமாகும்.

இளவரசர் தற்சமயம், கம்யூனிஸ்ட் சீனாவின் ஆதரவுடன், பீகிங்கில் இருப்பது தெரிந்ததே. இளவரசர் சிஹானுக் பதவியற்ற அரசு ஒன்றைப் பீகிங்கில் வைத்திருக்கிறார். (ம)

## ஜே. ஆர்., சுகததாசா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போக்குவரத்து அமைச்சர் திரு. லெஸ்லி குணவர்த்தனா, தான் இது பற்றிக் கவனிப்பதாக உறுதியளித்தார்.

ஜாதிக சேவக சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் இ. போ. ச. பஸ் மூலம் துல்கிரிய புடவைக் கூட்டுத்தாபனத்திற்கும், இரத்மலானை ரயில்வே வேலை ஸ்தலத்திற்கும் போக முடியாமல் உள்ளார்கள் என்பதும் பேச்சுவார்த்தையின்போது சுட்டிக் காட்டப்பட்டது.

போக்குவரத்து அமைச்சர், தான் அவற்றைக் கவனித்து ஆவன செய்வதாக உறுதியளித்தார்.

"கட்சி சார்பாக வேலை செய்தவர்களென ஊழியர்கள் பழி வாங்கப்பட்டு வருகிறார்கள். அவர்களுக்கு நீங்கள் வெகு விரைவில் அரசியல் உரிமைகள் வழங்கவிருக்கிறீர்கள். ஆகவே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமுன் அவர்களது குடும்ப நிலையையும் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்" என்றும் பிரதமருக்கு அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

போக்குவரத்து அமைச்சின் கீழ் கடமையாற்றி வந்த ஊழியர்களின் இடமாற்றம், வேலை நீக்கம் ஆகியன பற்றி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டபோது அவர், தான் ஆலோசித்து நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார். (ய-7)

## மீன்பிடி துறைமுக வேலைகள் கைவிடப்படும்?

மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தினால் கையேற்கப்பட்ட நான்கு மீன்பிடித் துறைமுக வேலைகளும் கைவிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


## கோபால் பல்பொடி

பற்களுக்கு வெண்மை தந்து பல் வியாதிகளைக் குணப்படுத்துகிறது. இந்தியாவிலும் இலங்கையிலும் விற்கப்படுகிறது.



**S. P. S. ஜெயம் அன் கோ.**

மதுரை - கொழும்பு

விற்குமிடம்:-

34, செட்டியார் தெரு,
கொழும்பு - 11

தபால் பெட்டி: 1298.
தொலைபேசி எண்; 26584


இப்பத்திரிகையை அச்சிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேன மாவத்தை, கொழும்பு - 12 (இலங்கை). வெளியிட்ட திகதி 1 ஜூலை 1970.
Thanthi 5, Gunasena Mawatha, Colombo 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org